
உள்ளொளி பதிப்பகம்—சென்னை-28

2/6

ஆன்ம வழிபாடு




முருக சக்கரத்தின் ஏழு பகுதிகள்



பூ புரம்


முதல் பகுதி

வளையங்கள்



இரண்டாம் பகுதி

12 இதழ்கள்



மூன்றாம் பகுதி

(3-ம் அட்டை பக்கம் பார்க்க)

ஆன்ம வழிபாடு

(முருக சக்கர விளக்கம்)

★

கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணுக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு
வண்ணுக்கி னுள்ளே யகண்ட வொளிகாட்டிப்
புண்ணுக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே

நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்க ணரபதி யாய் நிற்பர்
தேட வல்லார்க டெரித்த பொருளிது
கூடவல் லார்கட்குக் கூறலு மாமே

கழிகின்ற வப்பொருள் காணுகி லாதார்
கழிகின்ற வப்பொருள் காணலு மாகுங்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத வப்பொருள் காணலு மாமே.

உடலைவிட்டு நீங்கும், ஆனால் அழியாது விளங்கும், பொருளைக்காண மேலை நாட்டவரும், கீழ் நாட்டவரும் முயற்சிகள் பல எடுத்திருக்கின்றனர். மேலை நாட்டவர் ஊக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சியின் வாயிலாகவும், கீழ் நாட்டவர் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட அனுபூதி வாயிலாகவும் முனைகின்றனர்.

கழிகின்ற அப்பொருளைக்காண உதவுவது உள்ளம். உள்ளம் என்பது, நினைப்பது என்ற பொருள்படும், அப்படி மனிதனிடை உள்வது மனமாகும்.

அகத்தினை ஆராய்ச்சியில் ஈடுபட்டோரிடையே மனம் உள்ளதா ? இல்லதா ? சடமா ? சித்தா ? என்ற விசாரணைகள் பல எழுந்தன.

1. மனம் எங்கே ?

நாம் காண்பது, கேட்பது, முகர்வது சுவைப்பது, உணர்வது, எண்ணுவது, விரும்புவது, வெறுப்பது ஆராய்வது போன்ற வினைகளைச் செய்வதற்கு மூல காரணமாக இருப்பது மனம். அது எங்கே இருக்கிறது என்று சாதாரண மனிதனைக் கேட்டால், அவன் நெஞ்சத் தாமரையில் கை வைப்பான். மேலை நாட்டார் ''பொதுவாக மனம் மூளையிலிருக்கிறது'' என்பதற்காதாரமாக, மூளை மற்ற உறுப்புகளுடன் தொடர்பு பெற்றிருக்கிறதென்றும், அத் தொடர்பு, நரம்புகளால் ஆக்கப்பட்டிருக்கிறதென்றும், மூளை நரம்புத் தொடைகளால் வேயப்பட்டிருக்கிறதென்றும், அத் தொடைகளை வேறு பல மெல்லிய நரம்புக்கோப்புகள் காத்து வருகின்றதென்றும், அக்கோப்புகளைக் காக்க மிக மெல்லிய மூல நரம்புகள் இருக்கிறதென்றும், அவைகளினூடே மிக மிக நுண்ணிய அறைகள் செறிந்திருக்கின்றன வென்றும், அச்செறிவுகளில் ஒருமைப்பாடிருக்கிறதென்றும், அவ்வொருமைப்பாட்டினின்றும் உருக்கொள்வது மனம் என்றும் கூறுவர். அவர்களுள் சிலர் மனத்தை பண்பு என்பர்; சிலர் விளைவு என்பர். இவர்கள் கூற்றிலிருந்து, (1) மூளை

 216

ஒழுங்கு; (2) நரம்பு ஒழுங்கு; (3) மன ஒழுங்கு வாழ்விற்கும், இறை உணர்வு பெறுவதற்கும், இன்றியமையாதன என்பது விளங்குகிறது.

கீழ் நாட்டவர் மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் கண்ட பல உண்மைகளை, தங்களுடைய அனுபவத்தால் கண்டுள்ளனர். அவர்கள் சிறப்பான முறைகளைக் கையாண்டு மனத்தின் பரிய இயல்புகளையும், நுண்ணிய இயல்புகளையும் உணர்ந்திருக்கின்றனர். கீழ் நாட்டு அகத்தினையர் மனம் விழிப்பில் பெருமூளையில் நிலவுகிறதென்றும், கனவில் சிறு மூளையில் இறங்குகிறதென்றும், உறக்கத்தில் இதயம் நன்னுகிறதென்றும், ஞானயோகியர் மனத்தைத் தம் வயப் படுத்தி ஆட்ட வல்லவரென்றும் தம் மனத்தை உடலுள் எவ்விடத்தும் நிகழச் செய்பவரென்றும் கண்டு பிடித் துள்ளனர்.

அவர்கள் கையாண்ட முறைகளில் யந்திர, மந்திர, தந்திர முறைகள் சிறப்புப் பெற்றவை. யந்திர, தந்திர மந்திரத்தில், மனத்தை ஈடுபடுத்தி நடுமன விளக்கம் காணும் போது பல சித்துகள் மனிதனை அடைகின்றன. அச்சித்து களைத் துச்சமாகக் கருதும் சித்த புருஷன் காலம் கடந்த வனாகிறான். அவனுக்கு கழிகின்ற அப்பொருளின் முழுத் தோற்றத்தைக்காண முடிகிறது.

மனத்தினை ஒரு தத்துவமாகக் கொண்டு அதன் பரிய இயல்புகளையும், நுண்ணிய இயல்புகளையும் உணர்வதற்கு ஏற்பட்ட வரைப்படம் தான் யந்திரமாகும். அந்த யந்திரத்துடனே அது குறிக்கும் தேவதைகளின் ரூபத்துடனே இரண்டறக் கலக்க ஏற்பட்ட பூசை முறை தந்திரமாகும். சரியான உச்சரிப்புடன் எடுத்து ஓத வேண்டிய ஒலிக் கற்றைகள் தான் மந்திரமாகும்.

2. யந்திரம் மந்திரம் தந்திரம்

யந்திர, மந்திர தந்திரங்கள் பல இந்நாட்டில் இருக்கின்றன. அவைகள் வாயிலாக பயன் பெற்றோர் அநேகர். இவையாவும் இது வரையில் இரகசியமாகப்

போதிக்கப்பட்டு வந்துள்ளன. ஏனெனில் இம்முறைகளைச் சரியானபடி பின்பற்றுவிட்டால் நன்மைகளைவிட தீமைகள் தான் அதிகம் விளையும். ஆகவே முறைகள் அனைத்தையும் ஏட்டளவிலே தெரிந்து கொள்ளுவது மட்டும் போதாது. முற்றும் கற்றுணர்ந்து, பயிற்சியில் மிக்க ஒரு குருவின் மூலமாக முறைகளின் சீறிய பாகங்களையும், மந்திரங்களின் உச்சரிப்பையும் கற்க வேண்டும். அப்படிக் கற்று, இறை யுணர்வு பெற்று, கழிகின்ற ஆன்மாவின் உண்மை சொரூபத்தைக் காணலாம்.

3. முருகனின் யந்திரம்

தமிழ் கடவுளான முருகனின் யந்திர, மந்திர, தந்திர உபாயங்கள் இங்கு விளக்கப் பட்டுள்ளன. இம் முறைகளைத் தெரிந்து கொண்டு ஒவ்வொருவரும் தங்கள் மனத்து விளக்கினை மாண்புற ஏற்றிக்கொள்ள வேண்டும். இம் முறைக்கு உழைப்பு தேவை.

இங்கு விளக்கப்பட்டுள்ள தத்துவங்கள், சக்கரங்கள் முதலியனவற்றை அரிசிக்கு ஒப்பிடலாம். அரிசியை வேக வைத்துப் பக்குவமாக வடிக்க வேண்டும். அரிசியைச் சோறுக்கிய பிறகு அதை உண்பதற்கு அறுசுவைக் கறிகளும் வேண்டும். இந்த உபகரணங்கள் அவரவருடைய சுவைக்குத் தகுந்தபடி அமைய வேண்டுவது போல், சக்கரபூசை முறை களும் ஒவ்வொருவரின் மனப் பக்குவத்திற்கு தகுந்தது போல் அமைய வேண்டும். இதனை அமைத்துத் தருபவர் ஒரு குரு ஆவார். அந்த குரு வரும்வரையில் ஒவ்வொருவரும் தம் அறிவை விசாலப் படுத்திக் கொள்ள சக்கரங்களின் உட்பொருளை அறிந்து கொள்ளவேண்டும். அரிசியைச் சேர்த்து வைத்துக் கொண்டால் பசிவரும் நேரம் பார்த்து, உடனடியாக உணவாக்கி உண்ணலாமல்லவா ?

ஆறுமுகச் சக்கரம் ஏழு பகுதிகளைக் கொண்டது. அப் பகுதிகளும் அவற்றின் முக்கியதுவத்துவங்களும் இங்கே சிறிதளவு விளக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதிக்கும் உரிய தேவதைகள் உண்டு. அத் தேவதைகள் ஒவ்வொரு தத்துவத்தைக் குறிப்பவை.

ஆறுமுகச் சக்கரத்தின் ஏழு பகுதிகளாவன :

1. பூ புரம்
2. வளையம்
3. பன்னிரு இதழ்கள்
4. ஆறு இதழ்கள்
5. ஆறு கோணம்
6. முக்கோணம்
7. பிந்து.

இவற்றின் ஆறுபாகங்களை ஒன்றின் மேல் ஒன்ருக படிப்படியாக நிறுத்தி, பிந்துவாகிய ஏழாவது படியிலே, ஆறுமுகப் பெருமான் மயிலைவாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டு ஞான சக்தியான வேலினைத் தாங்கி, சிவசக்தி உருவத்துடனும், மங்கள ஒளியுடனும் காலமெல்லாம் விளங்குகிருர். முருகனது அருளால் யோகநிலை முற்றும் பெற்ற உத்தமர் தங்கள் உள்ளத்தில் நீங்காது உரையும் அண்ணலைக்காணும் காட்சி இது.

1 பூ புரம்

வெளி உலகமான முதல் படியிலே மனத்தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுத்திய ஆசிரியர்களையும் அதில் ஈடுபட்டு ஞான யோகம் பெற்ற சித்தர்களையும் மனத்தினைப் பக்குவப்படுத்த உதவும் ஆசிரியர்களின் உருவங்களையும் நினைத்தல் வேண்டும். இப் பகுதியில் மூன்று கோடுகள் உள.

முதல் கோட்டில் இருக்கும் ஏழு தேவதைகளாவன :

1. தக்ஷிணுமூர்த்திஸ்ரீ 2. நாருயணஸ்ரீ 3. ப்ரஹ்மஸ்ரீ 4. ஸனகஸ்ரீ 5. ஸனந்தனஸ்ரீ 6. ஸனுதனஸ்ரீ 7. ஸனத்குமாரஸ்ரீ

இரண்டாம் கோட்டில் உள்ள பத்து சித்தர்களாவன :

1. கச்யபர் 2. அத்ரி 3. பரத்வாஜர் 4. விஸ்வாமித்ரர் 5. கௌதமர் 6. ஜமதக்னி 7. வஸிஷ்டர் 8. சுகர் 9. அகஸ்தியர் 10. தத்தாத்ரேயர்.

மூன்றும் கோட்டில் நினைக்க வேண்டிய பத்து குரு உருவங்களாவன :

1. கோராக்ஷானந்த நாதர் 2. மத்யானந்த நாதர் 3. கோங்கணானந்த நாதர் 4 மோஹானந்த நாதர் 5. கல்ஹாடானந்த நாதர் 6. வைநேத்ரானந்த நாதர் 7. மலயாஸலானந்த நாதர் 8. மத்யானந்த நாதர் 9. கிரானந்த நாதர் 10. குரு நாதர்.

2 வளையம் :

இரண்டாவது படியிலே மனத்தின் குணங்களை ஆராய வேண்டும். வளையங்கள் மூன்று. முதல் வளையத்தில் குணங்களையும், இரண்டாவதில் வாக்கு தேவதைகளையும் மூன்றுவதில் நான்கு பஞ்சகங்களையும் நினைக்க வேண்டும்.

முதல் வளையத்தில் சிந்திக்க வேண்டிய குணங்களாவன சத்துவம், ரஜோ, தமோ, மாயையாகும். அதை எண் சித்திகள் காத்திருக்கும். அவையாவன :

1. அணிமாசித்தஸ்ரீ 2. மகிமாசித்தஸ்ரீ 3. கரிமா சித்தஸ்ரீ 4. லகிமாசித்தஸ்ரீ 5. பராப்திசித்தஸ்ரீ 6. ப்ரகாம்ய சித்தஸ்ரீ 7. ஈசித்வசித்தஸ்ரீ 8. வசித்வசித்தஸ்ரீ

இரண்டாவது வளையத்தில் விலங்கும் வாக்கு தேவதைகளாவன : பராவாக் தேவதா பச்யந்திவாக் தேவதா மத்யமாவாக் தேவதா வைகரீ வாக்தேவதா.

அவைகளில் காவல்புரியும் தெய்வங்களாவன :

1. விவேகஸ்ரீ 2. வைராக்யஸ்ரீ 3. சமஸ்ரீ 4. தமஸ்ரீ 5. அபராதிஸ்ரீ 6. திதிக்ஷாஸ்ரீ 7. சிரத்தாஸ்ரீ 8. ஸமாதானஸ்ரீ 9. முமுக்ஷுதாஸ்ரீ 10. ச்ரவணஸ்ரீ 11. மனனஸ்ரீ 12. நிதித்யாஸனஸ்ரீ

மூன்றும் வளையத்தில் நான்கு பஞ்சகங்கள் நிலவும் அவையாவன :

1. பூத பஞ்சகம் 2. குண பஞ்சகம் 3. ஞானேந்திரிய பஞ்சகம் 4. கர்மேந்திரிய பஞ்சகம்.
அவற்றை நவவீரர்கள் காவல் புரிகின்றனர் அவர்களாவன:

1. வீரபாகு 2. வீரகேஸரி 3. வீரமகேந்திரன் 4. வீர மகேஸன் 5. வீரபுரந்தரன் 6. வீராக்ஷன் 7. வீரமார்த் தாண்டன் 8. வீராந்தகன் 9. வீரதீரன்.

3 பன்னிரண்டு இதழ்கள்:

உலகுடன் கட்டுப்படுத்தும் காலத்தை உணர்வதற்காக பன்னிரண்டு இதழ்கள் உள்ளன. இப்பன்னிரண்டு இதழ் களையும் பன்னிரண்டு ராசிகளுடன் ஒப்பிடலாம். மேலும் பன்னிரண்டு இதழ்களில், 1. கலா 2. காஷ்டா 3. கடிகா 4. முகூர்த்தம் 5. திவஸம் 6. பக்ஷம் 7. மாசம் 8. ருது 9. அயனம் 10. சம்வத்ஸரம் 11. யுகம் 12. காவம் என்றவை விளங்குவாதக் கூறுவர்.

4 ஆறு இதழ்கள்:

ஆறுமுகச் சக்கரத்திற்கு ஆதாரமான இந்த ஆறு இதழ் களும் 1. சர்வஞ சக்தி (பூலோகம்) 2. நித்யத்ருப்தி சக்தி (அக்னிமண்டலம்) 3. அனுதி போத சக்தி (அந்தரிக்ஷம்) 4. நித்யமலுப்த சக்தி (சூரிய மண்டலம்) 5. ஸ்வதந்திர சக்தி (ஸ்வர்க்கம்) 6. அனந்த போத சக்தி (சோமமண்டலம்) என்ற சக்திகளின் பீடங்களாகும்.

5 ஆறு கோணம்:

ஐந்தாவது பாகம் ஆறு கோணமாகும். ஆறுமுகச் சக்கரம் உண்மையில் இரண்டு முக்கோணக்கூட்டு. முக் கோணத்தை சக்தி சக்கரம் என்பர். இதையே 'யோனி' அல்லது அல்குல் எனவும் கூறுவர். சக்தி சக்கரம் மேல் நோக்கியதாகவும் இருக்கும் கீழ் நோக்கியதாகவும் இருக்கும் மேல் நோக்கியதை யோகச் சக்கிரம் என்றும், அதை வணங் கின் யோக நிலையைக் கூட்டிவைக்கும் என்றும் கீழ் நோக்கிய

சக்கரத்தைப் போக சக்கரம் என்றும் அதற்குப் பூசைகள் புரிந்தால், சகல போகத்தையும் தரும் என்றும் கூறுவர். இந்த இரண்டு முக்கோணக் கூட்டால் ஏற்பட்ட ஆறுமுகச் சக்கரம், யோகத்தையும் போகத்தையும் தர வல்லது.

பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதமை
பெண்ணிடை ஆனும் பிறந்து கிடந்தது
பெண்ணிடை ஆணென் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்ற வாரே

என்ற மூலர் வாக்கு இங்கே கவனிக்கத்தக்கது. இரண்டு யோணி சக்கரங்களின் கூட்டால் ஏற்பட்டது ஆறுமுகச் சக்கரம் என்பதை உணருகிறோம். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து மட்டும் பிறந்ததாகக் கூறப்படும் ஆறுமுகம், ஆராய்ந்து பார்க்கையில், இரு சக்தி கூட்டாக அமைகிறான். கிரியா சக்தியும், இச்சா சக்தியும், ஆன யோக, போக சக்கரக் கூட்டான அந்த உருவத்திற்கு, ஞான சக்தி வேண்டற் பாலாகிறது. அதுதான் வேல்''. அதை வழங்குபவள் உமை. இச் சிறப்பான காட்சியை இன்றும் ''சிக்கல்'' என்ற ஸ்தலத்தில் காணலாம். அந்த ஊரில் நடக்கும் விழாவின் போது, முக்கியமாக முருகன் வேல் பெறும்போது, அவருடைய பஞ்சலோக பிம்பத்தில் வியர்வை உண்டாகிச் சொட்டுவது கண்கூடு. அக்காட்சி பக்தர்களை மயிர் கூச்செரிய வைக்கும் கண் கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது.

4 வாக்பவ சக்கரம்

இரு முக்கோணங்கள் சேரும்போது (1) ஆறு கோணங்களும் (2) 12 புள்ளிகளும் (3) 18 கோடுகளும் உண்டாகின்றன. 12 புள்ளிகள் உயிரையும் 18 புள்ளிகள் மெய்யையும் குறிக்கும். உயிர் மெய்யாக ஆறு கோணங்கள் இங்கு விளங்குகின்றன. இந்த ஆறு சக்கரங்களையும் வாக்பவ சக்கரம் என்று கூறுவர். இச்சக்கரத்தை நான்கு வேதங்கள் சூழ்ந்திருப்பதாகவும், சிக்ஷா சாஸ்த்ரஸ்ரீ, கல்ப சாஸ்த்ரஸ்ரீ, வியாகரண சாஸ்த்ரஸ்ரீ, சந்த சாஸ்த்ரஸ்ரீ, ஜயோதிஷ சாஸ்த்ரஸ்ரீ, ந்ருத்த சாஸ்த்ரஸ்ரீ என்ற ஆவரண தேவதைகள் காப்பதாகவும் எண்ணுவது மரபு. மேலும் சிவனார் (பரசிவ

பீடம்), நாராயணன் (ஜயந்தீபீடம்), சக்தி (சித்த சித்த பீடம்) கணபதி (பூர்ணகிரி பீடம்), சூரியன் (பூர்ணுபல பீடம்) பைரவர் (வனகிரி பீடம்) என்ற ஆறு கடவுளரும் ஆறு கோணங்களில் வீற்றிருப்பதாகவும் கொள்வர்.

6 கோணம்

ஆருவது பகுதியில் சக்தி கோணமான முக்கோணத்தில் இச்சா, பரா, ஞான சக்திகள் முறையே, ஸ்வரூப வாணி சமேத ப்ரஹமாவாகவும், ஸ்வரூப ருத்ராணி சமேத ருத்ரஞகவும், ஸ்வருப வைஷ்ணவி சமேத விஷ்ணுவாகவும், விளங்குகிறன.

7 பிந்து

ஏழாவது பகுதியான பிந்துவில் சிவசக்தி சொரூபமாக முருகப் பெரும்மான் அருள் காட்சி அளிக்கிருர்.

அனுஷ்டான விதிகள்

சூரியோதயத்திற்கு முன் நித்திரை நீங்கி எழுந்து, விபூதி தரித்து சிறிது நேரம் உட்கார்ந்து கடவுளைத் தியானம் செய்தல் வேண்டும். பின்பு எழுந்து வீட்டினுள்ளே சற்றே உலாவுதல் வேண்டும்; பிறகு மலஜல உபாதிகளைக் கழித்தல் வேண்டும், மலமாவது ஜலமாவது பற்றறக் கழியும் வரையில், வேறு விஷயங்களைச் சிறிதும் நினையாமல், இருக்க வேண்டும்.

பின் வேலங்குச்சி ஆலம் விழுது இவைகளைக் கொண்டு பல்லழுக்கெடுத்து, அதன் பின் கரிசலாங்கண்ணித் தூள் கொண்டு உள்ளே சிறிது சாரம் போகும்படி பல் தேய்த்து வாய் கழுவ வேண்டும். அதுவன்றி தற்போது கடைத் தெருக்களில் விற்கும் பல்பொடியையோ அல்லது பற்பிசினையோ உபயோகிக்க நேர்ந்தால் அவை பற்களைக் கெடுக்காவண்ணம் நன்மை பயப்பதாக உள்ளனவா என்று பரிசீலித்துத் தேர்ந்து எடுத்து, உபயோகிக்கவேண்டும். கூடுமானவரையில் பொடியையோ, பிசினையோ அடிக்கடி மாற்றக்கூடாது. அவை பற்களுக்கு கெடுதி விளைவிக்கும். செவிகள், கண்கள், நாசி, வாய், தொப்புள்-இவைகளில் அழுக்கு, பீளை, சளி, ஊத்தை என்கிற அசுத்தங்களையும், கை கால் முதலிய உறுப்புக்களிலுள்ள அழுக்குகளையும் நீரினால் பற்றறத் துடைத்தல் வேண்டும். பின் ஸ்நானம் செய்வதற்குத் தயாராகவேண்டும்.

நீர் நிலைகள் உள்ள இடங்களில், நதியில் அல்லது வீட்டிலேயே தயாரித்து வைத்திருக்கும் நீரினில் குளிக்கலாம். சுத்தமான நீராகப் பார்த்து ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நானம் செய்வதற்கென எடுத்துக்கொள்ளும் எவ்வகை நீரையும் கங்கையாகவும், சரவணப் பொய்கையாகவும் பாவிக்க

வேண்டும். எடுத்துக்கொண்ட நீரின்மேல், வலக்கை விரலால் ஓங்காரம் வரைந்து,

கங்கேசயயமுனேசைவ கோதாவரீஸரஸ்வதி !
நர்மதேசிந்துகாவேரீ ஜலேஸ்மிந்ஸந்நிதிம் குரு !
ஆயாந்து ஸுப்ரஹமண்ய பூஜார்த்தம் !
துரிதக்ஷயகாரகா :!!

என்று கூறி நீரை வணங்கி, செவ்வேள் பரமனைச் சிந்தித்து சர்வ பாவ நாசமுஞ் சர்வபுண்ய விருத்தியுமுண்டாகுமாறு சித்திந்து, ஸ்நானம் செய்தல் வேண்டும்.

ஸ்நானம் முடித்து வந்த பின்னர் தூய ஆடையுமுடுத்த வேண்டும்.

பின் பூஜைக்காகவே ஒதுக்கப்பட்ட பூஜை அறையினுள்ளே செல்ல வேண்டும். அப்படித் தனியாக அறையொன்று ஒதுக்கப்படாமல் இருந்தால், பூஜைக்காகச் சுத்தம் செய்யப்பட்டிருக்கும் இடத்தில் பூஜாதிரவியங்களை முன்னேற்பாட்டுடன் தயாரித்து வைத்துக் கொள்ளவும். பூஜைக்குரிய இடம் சாதனம் பொருள்கள் எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்தபின், ஓர் ஆசனம் அமைத்து, அதில் ''ஓம் அஸ்த்ராய பட்'' என்று சொல்லி நீரைத் தெளித்து, அப்படி இடம் சாதனம் பொருள்கள் இவற்றையும் மேற்படி மந்திரத்தால் நீர் தெளித்து. தூய்மைப் படுத்திய பின், நிலையாக அமர வேண்டும்.

முருகப் பெருமானையே கணபதியாய் நினைத்து ''ஓம் கணபதயே நம'' என்று குட்டிக் கொள்ளவும்

குருவை நினைத்து.........குருப்யோ நம: என்று கும்பிடவும்.

அனுஷ்டான நீரை, ''ஓம் சிவாய நம'' : என்று சொல்லி வலக்கண்ணு லுலர்த்தி, நெற்றிக் கண்ணுனீற்றி, இடக் கண்ணுல் அமுதங்கொடு நனைத்துக் கொண்டதாகப் பாவித்து சலசுத்தி செய்தல் வேண்டும்.

''ஓம் அஸ்த்ராய நம:'' என்று சொல்லி அந்நீர்த்துளிகளைச் தலையின் மீது மும்முறை தெளித்துக் கொள்ளவும்.

''ஓம் அஸ்த்ராய ஸ்வாஹா'' என்று சொல்லி அந்நீரை மும்முறை தருப்பித்திக் கொடுத்தலும், ''ஓம் அஸ்த்ராய நம'' : என்று பத்துமுறை செபித்த பின்பு முன் போலவே ''ஓம் அஸ்த்ராய ஸ்வாஹா'' என்று ஒரு முறை தருப்பித்துக் கொடுத்தலும், மேல்-வலக்கை பெருவிரலடியிற்றிங்கிய நீரினுல்- ''ஆத்ம தத்வாய ஸ்வதா'' ''வித்யாதத்வாய ஸ்வதா'' ''சிவதத்வாய ஸ்வதா'' என்று மும்முறை ஆசமனஞ் செய்தவுடன் ''ஓம் அஸ்த்ராய பட்'' என்று சொல்லி உதடுகளிரண்டையும் வலக்கை பெரு விரல் கொண்டு இடமாக இருமுறையும், வல அங்கை கொண்டு கீழாக ஒரு முறையும் துடைத்தல் செய்து கை கழுவுதல் வேண்டும்-பின்பு ''ஓம் ஹ்ருதாய வௌஷட்'' என்று வலக்கைப் பெருவிரலோடு சேர்ந்த மோதிர விரலால், முகம் வலமூக்கு, இடமூக்கு, வலவிழி, இடவிழி, வலச்செவி, இடச்செவி, நாபி, மார்பு, வலத்தோள், இடத்தோள், சென்னி என்னும், பன்னிரு ஸ்தானங்களையும் தொட்டு விடுதல் வேண்டும்.

பின் வீபூதியினை வலக்கையாலெடுத்து இடக்கையில் வைத்து, வலக்கையால் மூடிக்கொண்டு பஞ்சபிரமபீஜ சடங்க மந்திரங்களான பதினொரு மந்திரத்தினுலும் அபிமந்தரித்து 'அஸ்த்ராய பட்' என்று உத்தூளனமாக (நீர் விட்டு குழைக்காது பொடியாக) பூசிக்கொள்ள வேண்டும். திரிபுண்டரமாக (நீர் விட்டு குழைத்து) இட வேண்டுமாயின் - ''ஈசாந மூர்த்தயே நம.'' என்று சென்னியிலும்,- ''தத்புருஷ வக்த்ராய நம :'' என்று நெற்றியிலும்,- ''அகோர ஹ்ருதாய நம :'' என்று நெஞ்சிலும்,- ''வாமதேவ குஹ்யாய நம :'' என்று நாபியிலும்,- ''ஸத்யோஜாத கவசாய நம :'' என்று இருதோள், இரு கரநடு, இரு மணிக்கட்டு, இரு விலா, முதுகு, கழுத்து என்று மிடங்களிலுமிட்டு ''அஸ்த்ராயபட்'' என்று கை கழுவுக. அப்புண்டர இடைவெளிகள் ஒவ்வோரங்குல அளவினவாக இருத்தல் நலம். துறவிகளுக்கு உத்தூளனமாகப் பூசுதல் முக்கியம்.

அங்கந் நியாஸம்

''ஓம் அஸ்ய ஸ்ரீஸுப்ரஹ்மண்ய மஹாமந்த்ரஸ்ய த்ரிபுராந்தகருஷி: அனுஷ்டுப்ச் சந்த: ஸுப்ரஹ்மண்யோ தேவதா போகமோக்ஷார்த்தே ஜபேவிநியோக:''- என்று ஒரு முறை சொல்லி நமஸ்கரிக்கவேண்டும். சொல்லுங் காலையில் வலக்கை, தலையைத் தொட்டுக் கொண்டும், இடக்கை, வலக்கையைத் தொட்டுக்கொண்டும், எழிலா யிருத்தல் வேண்டும் மேலும்,

1. ஓம் ஸ்கந்தாய அங்குஷ்டாப்யாம் நம:
2. ஓம் கார்த்திகேயாய தர்ஜநீப்யாம் நம:
3. ஓம் ஸுப்ரஹ்மண்யாய மத்யமாப்யாம் நம:
4. ஓம் ஸேனான்யை அநாமிகாப்யாம் நம:
5. ஓம் குஹாய கநிஷ்டிகாப்யாம் நம:
6. ஓம் ஷடாந்நாய கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:
7. ஓம் சம் ஹ்ருதயாய நம:
8. ஓம் ரம் சிரஸே ஸ்வாஹா
9. ஓம் வம் சிகாயை வஷட்
10. ஓம் ணம் கவசாய ஹும்
11. ஓம் பம் நேத்ரத்ராய வௌஷட்
12. ஓம் வம் அஸ்த்ராய பட்

என அந்தந்த இடங்களைத் தொட்டு விட்டுப் ''பூர்புவஸ் ஸுவரோம் இதி திக்பந்த;!'' என்று சொல்ல வேண்டும்.
''மேல் த்யாநம்''

(த்யானம்)

'' ஸிந்தூராருணமிந்து காந்திவதநம்
கேயூரஹாராதிபிர் !
திவ்யைராபரணைர் விபூஷிததநும்
ஸ்வர்க்காதிஸௌக்ய ப்ரதம் !!
அம்போஜா பயசக்திகுக்குடதரம்
ரக்தாங்கராகாம்சுகம் !
ஸுப்ரஹ்மண்யமு பாஸ்மஹேப்ரணமதாம்
பீதிப்ரணு சோத்யதாம் !!''

என்று சொல்லிக்கொண்டு திரு உருவைத் தியானித்து நமஸ்கார முத்திரையினுல் கும்பிடல் வேண்டும். பின் 'ஜபம்' என்று சொல்லிக்கொண்டு ஷடாக்ஷர மந்திரமான "ஓம் சரவணபவ ஹ்ரீம்" என்ற மகா மந்திரத்தை 108 உரு நன்கு செபித்தல் வேண்டும்.

பின் "ஸ்ரீ வல்லீ தேவ ஸேநாம்பா ஸமேதம் அகண்டக் ஞாந சிவஸுப்ரஹ்மண்யம் ஆவாஹயாமி" என்று தேவி களோடு அமர்ந்துள்ள ஸ்ரீ குமார பிரானை ஆவாஹனஞ் செய்து கொள்ளவேண்டும். அப்படிச் செய்துகொண்ட பின்னர்—

1. ஆஸநம் ஸமர்பயாமி (தவிசளித்தல்)
2. பாத்யம் ஸமர்ப்பயாமி (கால் கழுவு நீருதவல்)
3. அர்க்யம் ஸமர்ப்பயாமி (கை கழுவு நீருதவல்)
4. ஆசமநீயம் ஸமர்ப்பயாமி (ஆசமன நீருதவல்)
5. சுத்தோதகஸ்நாநம் ஸமர்ப்பயாமி
ஸ்நாநாந்தரம்-ஆசமநீயம் ஸமர்ப்பயாமி } அபிடேகம்
6. வஸ்தரயூக்ம்ம் ஸமர்ப்பயாமி
7. உபவீதம் ஸமர்ப்பயாமி } அக்ஷதையால் செய்யலாம்
8. கந்தாம் தாரயாமி (சந்தனம்)
9. புஷ்பாணி பூஜயாமி (பூக்கள், அக்ஷதை)
10. தூபம் ஸ மர்ப்பயாமி
11. தீபம் ஸமர்ப்பயாமி } (மும்முறை வலமாகச் சுற்ற வேண்டும்)
12. நைவேத்தியம் நிவேதயாமி
நைவேத்யாந்தரம் - அர்க்யம் ஸமர்ப்பயாமி, பாத்யம் ஸமர்ப்பயாமி, ஆசமநீயம் ஸமர்ப்பயாமி, தாம்பூலம் ஸ்மர்ப்பயாமி
13. கற்பூர நிராஜநம் ஸமர்ப்பயாமி (மந்திரம் புஷ்பமும்)

சாமரம் ஸமர்ப்பயாமி
ஆலவட்டம் ஸமர்ப்பயாமி
சத்ரம் ஸமர்ப்பயாமி (குடை)
தர்பணம் தர்ஸயாமி (கண்ணடி)
ஸ்தோத்ரம் ஸமர்ப்பயாமி (மனதிற்குகந்த படி மஹான்களால் இயற்றப்பட்ட ஸ்தோத்திரப் பாடல்களில் சிலவற்றை பாடவும்)

14. நமஸ்காரம் ஸமர்ப்பயாமி
15. பரதக்ஷிண நமஸ்காரம் ஸமர்ப்பயாமி
16. திவ்ய சயநம் ஸமர்ப்பயாமி (அமளியிற் படுத் திருக்கும்படி வேண்டல்

என்று அந்தந்த உபசாரங்களைச் செய்யவேண்டும. முடிவிலே ''ஸர் வோப சாராந் ஸமர்ப்பயாமி'' என்றும் சொல்ல வேண்டும். இதற்கு மேல் பிரார்த்தனையோடு கூடிய தோத்திரமாகப் பண்ணோடும் பாட விருப்பமுள்ளதாயின் 'திருப்புகழ்' முதலிய நூல்களிலுள்ள பாடல்களைப் பாடலாம்.

இப்படி ஸ்ரீ குமரக் கடவுளை அனுதினமும் பூஜித்து அருளுக்குப் பாத்திரமாக சாதகன் தன்னை பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

விரதங்கள்

விரதங்கள் என்ற சொல்லுக்கே மேற்க் கொள்ளப் படுவன அல்லது வரிக்கப்படுவன என்பது பொருள். ஊனினை உருக்குவதற்காகவே உண்டியைச் சுருக்கவேண்டும். ஊனினைச்சுருக்கி, சாதனத்தில் ஈடுபடும்போது, உள்ளொளி பெருகுகிறது. உள்ளொளி பெருகுவதால், இறை விளக்கம் ஏற்படுகிறது. இப்படி எளிதில் இரை விளக்கத்திற்குச் சாதனமாக அமைந்திருக்கும் விரதங்களை வாரவிரதம், நாள் விரதம், பட்ச விரதம் என்று மூன்று வகையாகப் பிரித்திருக் கிறார்கள்.

ஐப்பசி மாதம், முதல் வெள்ளிக்கிழமையன்றோ அல்லது சித்திரை மாதம் முதல் வெள்ளிக்கிழமையன்றோ தொடங்கி, பின் வெள்ளிதோறும் அதிகாலையில் எழுந்திருந்து நீராடி, முருகனைத் தியானித்து, வீட்டில் தூய்மையான இட மொன்றில் நெல்பரப்பி, இதன்மேல் கலசம் வைத்து, மாவிலை, தர்ப்பை, மாலை, ஆடை முதலியவற்றால் அலங்கரித்து முருகன் திரு உருவத்தையோ சக்கரத்தையோ எழுந்தருளப்பண்ணி, விதிப்படி பூசை செய்தல் வேண்டும்.


மாலை, ஆலயம் சென்று, முருகனுக்கு பழங்களை நிவேதித்து, பிறகு அவற்றை உண்ணலாம். மறு நாள் நீராடி, பூசை பண்ணப்பட்ட முருகனின் உருவம், கும்பம் இவைகளைத் தானம் செய்து, ஒன்பது நாழிகைக்குள்ளாகப் புசிக்க வேண்டும். இது வார விரதமெனப்படும்.

நாள் விரதமென்பது கார்த்திகைமாதக் கார்த்திகை முதலாக, கார்த்திகை நக்ஷத்திரந்தோறும் பன்னிரண் டாண்டு மேற்கொள்ளப்படும் விரதம். கார்த்திகைக்கு முதல் நாள் நண் பகல் மட்டும் உண்டு, பின் நாள் முழுவதும் உண்ணுவிரதமிருந்து மறு நாட்காலை ஒன்பது நாழிகைக்குள் புசிக்க வேண்டும். ஒரு கைத்தண்ணீரை உணவாகக் கொள்ளுதல், தருப்பையில் படுத்தல், புணர்ச்சி தவிர்த்தல், கந்தபுராணம் போன்ற முருகனது புகழ் விளக்கும் நூல்கள் படித்தல், கேட்டல், தூங்காது விழித்தல் என்ற ஒழுக்கங்களை விரதகாலங்களில் மேற்கொள்ளவேண்டும்.


பட்ச விரதமென்பதை சஷ்டி விரதமென்பார்கள். ஐப்பசி மாதச் சுக்ல பட்சத்து சஷ்டி தொடங்கி ஓராண்டு அனுஷ்டிப்பது. விரதகாலமான ஆறு நாட்களிலும் (ஐப்பசி கந்த சஷ்டி விரதகாலத்தில்) உமிழ் நீரும் உள்ளே விழுங்காத படி அனுஷ்டிப்பதுண்டு. முடியாதவர்கள். ஆறுமிளகையும் ஆறுகை நீரையும் அருந்தலாம். அதிகாலையில் எழுந்திருந்து, காலைக் கடன்களை முடித்து, திருநீரு பூசி. குகனைத் தியானித்து, நீராடி, தோய்த்துலர்ந்த தூய்மையான ஆடை உடுத்தி, முருகன் நினைவாகவே இருத்தல் வேண்டும். இரவிலே நெய்யில் சமைத்த மோதகத்தை நிவேதித்து விதிப்படி பூசித்தல் வேண்டும். ஏழாம் நாட் காலையில் சிறப்பு வழிபாடுகள் நடத்திய பின் புசிக்க வேண்டும். கடுமையான விரதம் அனுஷ்டிப்பவர்கள் இந்த விரதகாலத்தில் உப்பு நீர், எலுமிச்சம் பழம், நார்த்தம் பழம் போன்ற பழச்சாறு, இளநீர் போன்ற பானங்கள் கூட உட்கொள்ளமாட்டார்கள்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆறு இதழ்கள்



நான்காம் பகுதி



ஆறு கோணம்

ஐந்தாம் பகுதி

கோணம்



ஆறும் பகுதி




பிந்து

ஏழாம் பகுதி

(முருக சக்கரம் 4-ம் அட்டையில் பார்க்கவும்)

ஆன்ம வழிபாட்டிற்கு

ஆறுமுக சக்கரம்



விலை
60 காசுகள்

குரு பிரிண்டர்ஸ், சென்னை-1.